## மல ஜலம் கழிக்கும் முறை

1 **மல ஜலம் கழிக்கும்போது அல்லாஹ்வின் பெயரைக்கொண்ட** எந்த ஒன்றை யும், உதாரணமாக, ஃகுர்ஆன் வசனம், நபிமொழி அல்லது வேறு புனிதத்தன்மை வாய்ந்த எதையும் தன்னுடன் வைத்துக்கொள்ளக் கூடாது, வேறு வழியே இல்லாத, ஏதும் தவறிவிடும் அச்சம் இருந்தால் தவிர.

2 **மக்களுடைய பார்வையிலிருந்து ஒதுங்கி** மறைவான இடத்தில் கழிக்க வேண்டும் மற்றும் மற்ற மக்களுக்கு கஷ்டம் ஏற்படும் வகையிலான இடத்திலும் கழிக்கக்கூடாது.

3 **மல ஜலம் கழிக்கும்போது அதற்கான துஆ ஓதவேண்டும்** இறைத்தூதர் ﷺ அவர்கள் இந்த துஆவை ஓதுவார்கள்:

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الخُبُثِ وَالخَبَائِثِ

*பொருள்: அல்லாஹ்வே, ஆண் பெண்ணான ஷைத்தான்களிடமிருந்து நான் உன்னுடைய பாதுகாப்பு தேடுகிறேன்.*

4 **மல ஜலம் கழிக்கும்போது ஒன்றும் பேசக்கூடாது**

5 **ஃகிப்லாவைக் கண்ணியப்படுத்தும் வகையில்** மல ஜலம் கழிக்கும்போது ஃகிப்லாவின் புறமாக முகத்தைத் திருப்பியோ அல்லது அதன் புறமாக முதுகைத் திருப்பியோ உட்காரக்கூடாது. இருப்பினும், ஒருவருடைய வீட்டுக்குள் அவ்வாறு இருந்தால் தவறில்லை.

6 **மல ஜலம் கழிக்க உட்காரும்போது கவனிக்கவேண்டியது** உட்காரும் இடம் அசுத்தம் மீண்டும் சரிந்து தன்மீது விழுந்துவிடும் வகையில் சாய்வானதாக இருக்கக்கூடாது, பொந்துக்கள், சந்து மற்றும் வெடிப்பு களில் மலஜலம் கழிக்கக்கூடாது, ஏனெனில், அவை ஜின்களின் இருப் பிடமாக இருக்கலாம், அல்லது அவற்றில் பாம்பு மற்றும் தேள் ஆகி யனவும் இருக்கலாம்.

7 **மல ஜலம் கழிக்க மக்கள் நடமாடும் பாதைகளிலோ அல்லது நிழலான இடங்களிலோ உட்காரக்கூடாது** இதனால் மக்களுக்கு கஷ்டங்கள் ஏற் படும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

أتقوا اللعانين قالوا: وما اللعانين يا رسول الله قال: الذي يتخلى في طريق الناس أو في ظلهم

www.uzairfalahi.com

*பொருள்: இரண்டு சபிக்கப்படுபவர்களில் ஒருவராக ஆகிவிடாதீர்கள், கேட்கப்பட்டது, சபிக்கப்படும் இரண்டுபேர் யார், அவர்கள் ﷺ கூறிறார்கள்: ஒருவர், மக்கள் செல்லும் வழியில் உட்கார்ந்து மல ஜலம் கழிப்பவர், மற்ற ஒருவர் நிழலான ஓரிடத்தில் மல ஜலம் கழிப்பவர்(முஸ்லிம், அபூ தாவூத், அஹ்மத்)*

8 **தேங்கியிருக்கும் தண்ணீரிலும் மக்கள் குளிக்கும் இடங்களிலும் மல ஜலம் கழிக்கக்கூடாது** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَا يَبُولَنَّ أَحَدُكُمْ فِي الْمَاءِ الرَّاكِدِ، ثُمَّ يَغْتَسِلُ مِنْهُ

*பொருள்: உங்களில் எவரும் தேங்கியிருக்கும் தண்ணிரில் சிறுநீர் கழிக்கவும் கூடாது அதன்பின் அதனைக்கொண்டே கழுவிக்கொள்ளவும் கூடாது (முஸ்லிம்).*

9 **உட்கார்ந்து மல ஜலம் கழிக்கவேண்டும்** சுத்தமாக இருப்பதற்கு இதுவே சிறந்ததாகும்

10 **மல ஜலம் கழிக்கும்போது சுத்தம் செய்ய இடது கையைப் பயன்படுத்தவேண்டும்** ஹஜ்ரத் ஹஃப்ஸா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் உண்பதற்கும் பருகுவதற்கும், கொடுக்கல் வாங்கலுக்கும் வலது கையைப் பயன்படுத்துவர்கள், இதனைத்தவிர மற்றவற்றிற்கு இடது கையைப் பயன்படுத்துவார்கள் (அபூ தாவூத், இப்னு மாஜா, அஹ்மத்)

11 **மல ஜலம் கழித்தபின் சோப்பினால் கைகளை சுத்தம் செய்து கொள்ளவேண்டும்**

12 **கழிவறையிலிருந்து வெளிவரும்போது முதலில் வலது கால் வைக்கவேண்டும் மற்றும் இந்த துஆவைச் சொல்லவேண்டும்** غُفْرَانَكَ ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் மல ஜலம் கழித்து வெளிவரும்போது غُفْرَانَكَ என்று கூறுவார்கள் (பெரும்பாலான முஹத்திதீன்கள்)

* * *

www.uzairfalahi.com